DHL WORLDWIDE EXPRESS
C/o COSMOS
MARKETING SERVICES.
120, K. K. S. Road Jaffna.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

துரித தபால் சேவைக்கு
இன்றே நாடுங்கள்!
DHL International
பாதுகாப்பாகவும் உரிய இடத்தில் கிடைக்கவும் சகல வெளிநாட்டு தபால்களையும் எம்மிடம் ஒப்படைக்கவும்.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 05 சனிக்கிழமை (21-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 291

# ஸ்ரீலங்கா ஜனாதிபதியிடம் இந்தியா விளக்கம் கோரும்?

## அமைதிப்படையை எதிர்த்துப் போரிட புலிகளுக்கு ஆயுதம் வழங்கப்பட்டதா?

புதுடில்லி, செப்டெம்பர் 21

இந்திய அமைதிப்படையை எதிர்த்துச் சண்டையிடுவதற்காக விடுதலைப் புலிகளுக்கு ஸ்ரீலங்கா அரசு ஆயுதங்கள் மற்றும் தளபாடங்களை வழங்கியதாக செய்திகள் வெளியானதை அடுத்து. இந்த விடயம் குறித்து இந்திய அரசு ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவிடம் உத்தியோக பூர்வமாக விளக்கம் கோரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்தியப் பத்திரிகைகள் நேற்று இச் செய்தியை வெளியிட்டன.

1989, 1990 ஆம் ஆண்டுகளில் வடக்கு - கிழக்கில் இந்திய அமைதிப் படை விடுதலைப் புலிகளுடன் யுத்தம் புரிந்துகொண்டிருந்த சமயம், மறுபுறத்தில் ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் கொழும்பில் பேச்சு நடத்திக் கொண்டிருந்தது தெரிந்ததே.

1990 ஜூனில் ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் வெடிக்கும் முன்னர் — இரு தரப்பினரும் சுமுகமாக பேச்சு

[3 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



உவர் அத்துலத்தார் அப்ப கோட்டை விட்டுட்டு இப்ப வியாக்கியானம் பேசிறார்...!

# நல்லூரில் மூன்று தினங்கள் திலீபன் நினைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 21

திலீபன் உண்ணா நோன்பிருந்து தியாக மரணம் அடைந்த நல்லூர் வீதியில், எதிர்வரும் 24ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் மாபெரும் உண்ணா நோன்பும், நினைவுக் கூட்டங்களும், கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இறுதி நாளான 26 ஆம் திகதி — திலீபன் தியாக மரணமடைந்த அன்று — மாலை 4 மணிக்கு மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது.

மேற்படி மூன்று தினங்களும் 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை உண்ணா நோன்பும், மாலை 6 மணி தொடக்கம் இரவு 10-30 மணி வரை நினைவுக் கூட்டம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் போன்றவை நடைபெறும்.

இறுதி நாளான 26 ஆம்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி மீது மற்றுமோர் அரசியல் குற்றப் பிரேரணை?

கொழும்பு, செப் 21

ஜனாதிபதி பிரேமதாஸா மீது இரண்டாவது அரசியல் குற்றச்சாட்டு பிரேரணை கொண்டுவருவது பற்றி ஆராயப்பட்டு வருவதாக முன்னாள் அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்தார்.

முதலாவது அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையை சபாநாயகர் ஏற்றுக்கொண்ட பின்னர் அரசியல் சாசனத்துக்கு முரணாக ஜனாதிபதி நடந்து கொண்டதைக் கண்டித்தே, இரண்டாவது அரசியல் குற்றப் பிரேரணை அமையும் என்றும் திரு. அத்துலத்முதலி கடந்த செவ்வாய் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்காவும் கலந்து கொண்டார்.

இங்கிலாந்து போன்ற நாடுகளில் உள்ள சட்டங்களின்படி நாடாளுமன்றத்தை கலைப்பதன் மூலமோ அல்லது நாடாளுமன்றத்தை ஒத்திவைப்பதன் மூலமோ அரசியல் குற்றச்சாட்டுப்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## உயர்நீதிமன்றிடம் பிரேமா ஆலோசனை கேட்கலாம்

கொழும்பு, செப். 21

தற்போது எழுந்துள்ள அரசமைப்பு நெருக்கடி தொடர்பாக தீர்வு காண்பதற்கு உயர் நீதிமன்றத்தின் உதவியை ஜனாதிபதி பிரேமதாஸா நாடலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

பொதுசன முக்கியத்துவம் வாய்ந்த சட்டப் பிரச்சினை ஒன்று எழுந்துள்ளது என ஜனாதிபதி கருதினால் அது தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையை ஜனாதிபதி கோரலாம் என்று அரசமைப்பின் 129[1] பிரிவு கூறுகிறது.

ஜனாதிபதி அத்தகைய விடயம் ஒன்றை உயர்நீதி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சபாநாயகர் முகம்மதுவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை?

கொழும்பு, செப். 21

சபாநாயகர் எம். எச். முகம்மது மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட வேண்டும் என்று ஐ.தே.க.வின் எம். பிக்கள் பலர் கோரியுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை மாலை நடந்த அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இக் கோரிக்கையை அமைச்சர் விஜேரத்னா பண்டா முன்மொழிந்து பேசினார்.

# பிரபாவிடமிருந்து நியாயமான பதில் கிடைத்தால் எனது பணி தொடரும்

## தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, செப். 21

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனுக்கு நான் அனுப்பிய கடிதத்துக்கு நியாயமான பதில் கிடைக்குமானால் நான் எனது நடவடிக்கையைத் தொடர முடியும்.

அமைச்சர் தொண்டமான் சென்னை ''பிரெஸ் கிளப்'' செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொண்டமான் அங்கு கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் கடிதம் அனுப்பி இருக்கின்றேன். கடிதத்தில் உள்ள விஷயங்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினருக்குத் தெரியாது.

பிரச்சினைக்கான தீர்வு குறித்து இ. தொ. காவின் சிந்தனையில் உள்ளது அக் கடிதத்தில் இடம் பெற்றிருக்கிறது.

கேள்வி: இலங்கையின் ஒற்றையாட்சி முறையை மாற்றும் அம்சம் இ. தொ. காவால் அந்த யோசனையில் முன்வைக்கப்பட்டுள்ளதா?

தொண்டமான்; திரு பிரபாகரனின் பதில் கிடைக்கும் வரை நான் பொறுத்திருக்க விரும்புகிறேன். திரு. பிரபாகரனிடமிருந்து நியாயமான பதில் கிடைக்குமானால் நான் எனது நடவடிக்கையை தொடரலாம். அப்போது அரசமைப்பில் மாற்றங்கள் அவசியம் செய்யப்படவேண்டுமா என்பதையும் பார்க்கலாம்.

கேள்வி: உங்கள் கடிதத்தை ஜனாதிபதி அங்கீகரித்திருக்கிறாரா?

தொண்டமான்: [இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில்தான் அக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் நேருக்கு நேர் பேசும் கட்டமே இல்லை. நாம் முயற்சிக்க வேண்டும். இருதரப்பினரும் சந்திக்க நாம் உதவுவோம்.

கேள்வி: இப்பிரச்சினைத்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளை அடக்குவதற்கு தமிழக அரசுக்கு ரூ.10 கோடி

சென்னை, செப். 21

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் நடமாட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு தேவையான பாதுகாப்பு செயற்பாடுகளை மேற்கொள்ள புதுடில்லி மத்திய அரசு தமிழக அரசுக்கு 10 கோடி ரூபாவை வழங்கியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தமிழக பொலீஸாருக்கு நவீன ஆயுதங்கள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றை வழங்க கூடுதல் நிதியை மத்திய அரசு ஒதுக்க வேண்டும் என்று மாநில அரசு முன்னர் கோரியிருந்தது.

# கிட்டுவின் தகவல் தொடர்பு சாதனம் ஜனாதிபதி பிரேமாவின் அன்பளிப்பு!

## அத்துலத் முதலி கூறுகிறார்

கொழும்பு, செப். 21

ஜனாதிபதியால் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட தகவல் தொடர்பு சாதனம் இன்னும் விடுதலைப் புலிகளினால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. விடுதலைப் புலிகள் பிரமுகர் கிட்டு பயன்படுத்திவரும் நவீன தகவல் தொடர்பு சாதனம் கூட இலங்கை அரசால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஒன்று தான்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் லலித் அத்துலத் முதலி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் நலன்கருதி ஜனாதிபதி பிரேமதாஸா விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கியிருக்க முடியாதா என்ற செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு திரு. லலித் அத்துலத்முதலி பதிலளிக்கையில்- 'நாட்டின் நலன் கருதி விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டிருப்பின் அது பற்றிய விஷயத்தை ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்திருக்கவேண்டும். ஆனால் அவர் அது குறித்து அமைச்சரவையுடனும் நாடாளுமன்றக் குழுவுடனும் கலந்தாலோசிக்கவில்லை'— என்று கூறினார்.

'புலிகளுக்கு ஆயுதம் வழங்கப்பட்டது குறித்து அமைச்சர்கள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில், பிரதமர் விஜேதுங்காவிடம் இது பற்றி கேட்கப்பட்டது. அக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த பிரதமர், இக்கேள்விக்கு...

ஒபரேஷன் லிபரேஷனுடன் ஆனையிறவு போரை ஒப்பிட முடியாது

# அவகாசம் கிடைத்திருந்தால் புலிகளை ஒழித்திருப்பேன்!

## லலித் இப்போது கூறுகிறார்

கொழும்பு, செப். 21

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் போது எனக்கு இன்னும் சிறிது காலம் அவகாசம் தரப்பட்டிருந்தால் யாழ்.குடாநாட்டில் இருந்தே விடுதலைப் புலிகளை துரத்தியடித்திருப்பேன்.

பத்தேகமவில் நடந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது;-

ஆனையிறவைப் பாதுகாக்க எமது படையினர் அதியுயர் தியாகம் செய்துள்ளனர்.

ஆனையிறவுப் போருக்கும் வடமராட்சி ஒபரேஷன் லிபரேஷனுக்கும் வித்தியாசம் உண்டு.

எமது வலிமையை பாவித்து ஆனையிறவை நாம் பாதுகாக்கவேண்டியதாயிற்று. ஆனால் வடமராட்சி நடவடிக்கை, விடுதலைப் புலிகள் கைப்பற்றிய பிரதேசத்தை மீட்க நடத்தப்பட்டதாகும்.

அப்போது இன்னும் சிறிது காலம் எனக்கு அவகாசம் தரப்பட்டிருந்தால் யாழ். குடாநாட்டில் இருந்தே விடுதலைப் புலிகளைத் துரத்தியடித்திருப்பேன்.

1984 முதல் 1987 வரையான [வடமராட்சி நடவடிக்கை உட்பட] இராணுவ நடவடிக்கையின் போது உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 738 தான். ஆனால் கடந்த

(3 ஆம் பக்கம் பார்க்க)

## விசேட ஜி.சீ.ஈ. பரீட்சை பெறுபேறுகள் தபாலில்!

கொழும்பு, செப். 21

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 1990 ஆண்டு நடத்தப்பட்ட விசேட ஜி. சீ. ஈ. உயர்தர விசேடப் பரீட்சை முடிவுகள் கடந்த 15 ஆம் திகதி தபாலில் அனுப்பப்பட்டதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை அனுப்பலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தபாலில் அனுப்பப்பட்ட பரீட்சை பெறுபேறுகள் யாழ். கிளிநொச்சி பரீட்சார்த்திகளுக்கு அடுத்த வாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

(உ-எ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

3½ மாத வயதுடைய சனன் மறி ஆட்டுக் குட்டிகள் இரண்டு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மனோகன் C/O மாட்டின் மாஸ்ரர், சென். அன்ரனிஸ் றோட், பண்டத்தரிப்பு. [4300]

## உடன் தேவை

தையல் நிறுவனம் ஒன்றிற்கு Partner ஆகவும், ஆண்களுக்குரிய ஆடைகள் வெட்டித் தைக்கக் கூடியவராகவும் உள்ளவர் தேவை. சலுகைகள் வழங்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். இல. 349 மேர்/பா உதயன், யாழ்ப்பாணம். [18184]

## மணப்பெண் தேவை

டென்மார்க்கிலுள்ள செவ்வாய்க்குற்றமுள்ள 28 வயது ஆசிரியருக்கும், குற்றமற்ற 27 வயது டாக்டருக்கும், இங்கு வேலை செய்யும் 34 வயது B. Sc. க்கும், 31 வயது குவான்டிற்றி சேவயருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். [18213]

## மணமக்கள் தேவை

யாழ். இந்து 32 வயது உத்தியோக மணப்பெண்ணுக்கு ஸ்பொன்சரோடு கனடா செல்ல விரும்பும் மணமகனும், 33 வயது எக்கவுண்டனுக்கும், வெளிநாடு விரும்பும் குற்றமுள்ள B Sc மணமகளுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். [18212]

## தவறிவிட்டது

சிவகலை மயில்வாகனம் ஆகிய எனது அடையாள அட்டை [628630838X] 17 - 9 - 91 இல் முத்திரைச் சந்திக்கும், மாநகரசபை அலுவலகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். [18205]

எனதும், மற்றொருவரினதும் பாஸ்போர்ட் பிரதிகள் என்வலப்புடன் 18-9-91 இல் ஆறுகால் மடத்திற்கும், மனிபாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். ம. கணேசராசா, அம்பாள் கோவிலடி மாதகல். [18208]

## அம்பாள் திருமண சேவை

M.L T வயது 31 கனடா விசா இருக்கும் மணப்பெண்ணுக்கு B Sc ICMA Part II, Book Keepers Bank Staff மணமகன் தேவை. விண்ணப்ப முற்பணம் ரூபா. 50/-. சின்னராச மிக குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். [18202]

## வேப்பம் / இலுப்பம் விதைகள

மிகவைத் நிறுவனம பாரம்பரிய மரங்களின் பயனை உணர்த்தும் வகையில், எண்ணெய் வித்துக்களான வேப்பம் / இலுப்பம் விதைகளை கிலோ ரூபா.5/- வீதம் வாங்குகிறது. பாடசாலைகள், சங்கங்கள், சபைகள் மற்றும் தனியாரும் இவற்றைச் சேகரித்துக் கொடுத்து தங்கள் நிதிவளத்தையும் பெருக்கலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். [சி 0568]

## ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும், பியூடோ, 39/17, மின்சார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி/0533)

## சோதிடம்

சகல விதமான பிரச்சினைகளும், தடைகளும், கஷ்டங்களும், நீங்கி அதிர்ஷ்டமாக வாழ ஆலோசனைகளும், தீராத கஷ்டங்களுக்கு யந்திரமும் வழங்குகிறோம். பலன் தவறினால் பணம் திரும்பப் பெற உத்தரவாதம். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர் ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறைவீதி, நல்லூர். [18199]

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



| வீரஜனனம்: | வீரமரணம்: |
| --- | --- |
| 23 | 22 |
| 09 | 03 |
| 1974 | 1991 |

### வீரவேங்கை பரமசிவன்
### (கிருஷ்ணகோபால் வசந்தகுமார்)

பாரிற்கு பாரமாய் பலர் இருக்க
பால்முகப் பாலகா! - நீ
தமிழ்ப் பாரினைக் காத்தாய்
விணுக்கு வந்த பெரும்
படையோடு வீரா! - நீ
விழித்து நின்று சினம் கொண்டாய்!
போர் புரிந்தாய்!
பண்புடன், அன்புடன் பழகி
வந்த பரமசிவனே! - உன்
புகழ் ஒருநாளும் மறைந்திடாது - புலி
உன் பணி தொடர நாம் விரைந்திடுவோம்!
உறக்கம் கலைந்து ஒருநாள் விழித்திடுவாய்!
உயரப் பறக்கும் புலிக்கொடி - அதனை
பார்த்து மனம் மகிழ்ந்திடுவாய்!

பெற்றோர், சகோதரர்கள்.

மட்டுவில் நாடு கிழக்கு.
பூநகரி. [18204]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
24 - 06 - 1987

உதிர்வு:
21 - 09 - 1990

### ஜெபரட்ணம் ஜெக்சன் (செல்வம்)

மூன்று வயதடைந்த முல்லைச் சிரிப்பழகா
ஈன்றவரின் இதயத் துடிப்பதனை அறியாயோ
சான்றவனாய் நீ வாழ நாம் மகிழ்வோம்
என்றிருந்தோம்
சந்நிதியிலே எமைவிட்டு சரித்திரத்தை முடித்தாயோ
ஆண்டொன்று போனாலும் ஆறாது உன் பிரிவு
வேண்டாத இந்நிலையை ஏன்தான் எமக்களித்தாய்
ஆண்டவனின் பாதமதை அணைத்துப் பிடித்த - நின்
நீண்ட பிரிவதனால் நிலைகுலைந்து வாடுகிறோம்.

உன் பிரிவால் வாடும்:
அன்பு அப்பா, அன்பு அம்மா,
உடன் பிறப்புக்கள், உறவினர்கள்.

இல: 14/8, வலதுரை,
8 ஆம் கட்டம், கந்தரமடம்,
ஓட்டுமடம். [illegible]
(சந்நிதி வீதி, வேலணைத்துறை,
நயினாதீவு.) (1804?)

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

### மா. யோகநாதன்

(மில் முகாமையாளர், நீர்வேலி)

தோற்றம்: 16-5 1938

மறைவு: 21-9-1990

எம்மை எல்லாம் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வளர்த்து, வாழவைத்து, எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொள்ள காலதேவன் எம்மிடமிருந்து பிரித்தது ஏனோ?

பிரிவால் துயருறும்:
சகோதரி குடும்பத்தினர்.

306, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (18187)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணிற்கு வரவு:
09 — 11 — 1955

விண்ணிற்கு விரைவு
12 — 08 — 1991

அமரர்

### வேலும்மயிலும் விஜயநாதன்

(பொறியியலாளர், கனடா)

மணப்பந்தலில் தொங்கிய மல்லிகை மணம்
மாறமுன், உனை இழந்து
திங்கள் ஒன்றும் ஆனது வா............?
நேற்றைய நிகழ்வாய் எம் மனதில்..........
உனை நினைத்திடும் தோறும் உள்ளம் நெகிழும்
அணை மீறும் உன் சோகம்
எண்ணி, எண்ணி உன் முடிவை
நினைவுறுத்தி, எம் மனதில்
கண்ணீரால் சாத்துகிறோம்
கனிவான எம் கண்ணீர் அஞ்சலியை........

உமது பிரிவால் துயருறும்:
திருமதி உ. சிவப்பிரகாசமும்,
பிள்ளைகளும்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய். [17926]

## விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவு



| மண்ணில்: | விண்ணில்: |
| --- | --- |
| 20 | 21 |
| 06 | 09 |
| 1952 | 1990 |

அமரர்

### மரியநாயகம் அன்ரனி எட்வேட்

(உதவிப் பொறியியலாளர், காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை)

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எம் மனது
மீண்டும் எம் நினைவலையை
மீட்டி இன்று பார்க்கின்றோம்
ஆண்டவனே! உம் சித்தம்
இது தானெனில் ஏற்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, மகன், தாய்,
சகோதரர் உறவினர்கள்.

சில்லாலை மேற்கு,
பண்டத்தரிப்பு. (18183)

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் சங்கம்

மேற்படி சங்கத்தின் நல்லூர், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழுள்ள பேக்கரி உரிமையாளர்களின் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 22 - 09 - 91 மு.ப 10-30 மணியளவில் செங்குந்தா இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். தவறாது சகல உரிமையாளர்களும் பங்கு பற்றும் வண்ணம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்.

3, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். [18209]

## யாழ்ப்பாண அத்தியட்சாதீன தென் இந்திய திருச்சபை அமெரிக்க இலங்கை மிஷன்

## 175 ஆவது ஆண்டு விழா

(1816 — 1991)

செப்டம்பர் 23 திங்கட்கிழமை

அன்புடையீர்!

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை வட்டுக்கோட்டையில் நடைபெற இருக்கின்ற அமெரிக்க இலங்கை மிஷனின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டங்களுக்கு நீங்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

### நிகழ்ச்சி நிரல்

8-30 நன்றி செலுத்தும் திருவிருந்து ஆராதனை
ஆசன ஆலயம், வட்டுக்கோட்டை

11-00 மிஷன் கூட்டமும், கலைநிகழ்ச்சிகளும்
ஒட்லி மண்டபம், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

2-30 பொதுக் கூட்டம்
ஆசன ஆலயம், வட்டுக்கோட்டை.

அருட்திரு. அ. ஜெயக்குமாரன்
செயலாளர்,
அமெரிக்க இலங்கை மிஷன்,
யாழ். அத்தியட்சாதீன தென் இந்திய திருச்சபை.
[சி-0581]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆக்கம்:
23 — 02 — 1954

அழிப்பு:
21 — 09 — 1989

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின்
உடற்கூற்றியல் தலைவர்
வைத்திய கலாநிதி

### இராஜினி திராணகம

M. B B. S. (Cey), PH.D [Liverpool]

பல்லாயிரம் அறிவுக் கண்களுக்கு
ஒளிதந்திட்ட
சூரியனை இழந்து
சூனியத்தில் வாழ்கின்றோம்
நீக்கற்ற கல்விக்கடலில் இருந்து
கரைசேர்ந்திட உதவிய
விளக்கினை இழந்து
கடலினில் தத்தளிக்கின்றோம்
ஏனெனில் நாம்
குருவை மட்டும் இழந்தவர்களல்ல
தாயையே இழந்த பிள்ளைகள்.

— மருத்துவபீட மாணவர்கள்.

[17910]

Digitised by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கப்பல் பொருள்கள்

கப்பலில் பொருள்களைத் தருவிப்பதில் உள்ள குறைபாடுகள் குறித்து, யாழ்ப்பாண மாவட்டத் தமிழர் நலன் காக்கும் ஒன்றியம் சுட்டிக் காட்டியுள்ளது. அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ள மகஜரிலேயே அந்தக் குறைபாடுகள் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் - கொழும்பு தரைவழி வாகனப் போக்குவரத்து தடைப்பட்டதால் ஏற்பட்ட பாதிப்பைக் குறைப்பதற்காகவே கப்பல் மூலம் பொருள்களைத் தருவிக்கும் மாற்று வழி நடைமுறைக்கு வந்தது.

வடக்குத் தமிழரைப் பட்டினி போடவில்லை, அவர்கள் மீது பொருளாதாரத் தடை எதுவும் விதிக்கவில்லை என்று வெளியில் காட்டிக் கொள்வதற்காகவே அரசாங்கம் கப்பல் மார்க்கமாக உணவுப் பொருள்களை அனுப்பத் தொடங்கியது.

கடந்த ஒன்றேகால் வருடங்களுக்கு மேலாக, வட பகுதி மக்களின் அத்தியாவசிய உணவுத் தேவையில் மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவாகவே அரசாங்கம் கப்பல் மூலம் அனுப்பி வைத்திருக்கிறது!

இப்போது தனியார் துறையினரும், தனியார் குழுக்களும் கப்பல் மூலம் பொருள்களைத் தருவிக்க தொடங்கி உள்ளன. மாதத்தில் சராசரி இரண்டு கப்பல்களே பொருள்களுடன் குடாநாட்டுக்கு வருகின்றன. அவற்றிலேயே தனியாருக்கு உரிய பொருள்களும் வந்து சேர்கின்றன. அதன் காரணமாக பொது விநியோகத் திட்டத்தின் மூலம்—பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம்- விநியோகிப்பதற்குரிய பொருள்கள் குறைவாகவே கப்பலில் வருகின்றன.

தனியார் துறையினர் தமது பொருள்களை தாம் நினைத்த மாதிரி, தமது வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்ற மாதிரி விற்கிறார்கள். வங்கி மற்றும் செயலகம், ஆஸ்பத்திரி போன்ற தனியார் குழுக்கள் தாம் கொண்டு வரும் பொருள்களை தமது ஊழியர்களுக்கு விநியோகிக்கின்றன.

இதன் விளைவு? — சாதாரண பொதுமக்களுக்கு நியாய விலையில் அத்தியாவசிய மற்றும் பாவனைப் பொருள்கள் கைக்கு எட்டுவதில்லை. அநியாய விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. பதுக்கல் காரணமாகச் சில வேளைகளில் அவற்றை அறவே வாங்க முடிவதில்லை.

ஆகையால் கப்பல் மூலம் உணவுப் பொருள்கள் கொண்டு வருவதில் உள்ள சீர்கேடுகள் நீக்கப்பட்டாக வேண்டும். இங்குள்ள தனியார் மற்றும் அரசதுறையினர் புரிந்துணர்வுடனும் மக்கள் நலன் நாடியும் செயற்படுவது மிக அவசியம்.

அதற்கு இரண்டு வழிகள் உள்ளன. அரசு அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்ப ஏற்பாடு செய்யும் கப்பலுக்கு மேலதிகமாக தனியார் துறைக்குரிய பொருள்களைக் கொண்டு வருவதற்கான கப்பல்களை ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போது இங்கே அதிக அளவில் பொருள்கள் வந்து சேரவும், பொருள்களுக்குரிய தட்டுப்பாடு நீங்கவும் வழி பிறக்கும்.

அவ்வாறு செய்ய முடியவில்லையெனில் கப்பலில் கொண்டு வரப்படும் பொருள்கள் யாவும் பொது விநியோக முறைக்கு உட்படுத்தப்பட வேண்டும். சகல மக்களுக்கும் பங்கிட்டு வழங்கப்பட வேண்டும். அதுவே நியாயமானது. மக்கள் நலன் நாடும் நடவடிக்கையாகவும் அமையும்.

## திலீபன் நினைவுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 21

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவை முன்னிட்டு குடாநாட்டில் இன்று பின்வரும் இடங்களில் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

★ வலிகாமம் பகுதிக்கான கூட்டம்—குருநகர் சனசமூக நிலைய முன்றலில் இரவு 7 மணிக்கு.

★ தீவகப் பகுதிக்கான கூட்டம்—புங்குடுதீவு காளி கோவிலடியில் மாலை 6.30 மணிக்கு.

★ வடமராட்சிக்கான கூட்டங்கள் — செம்பியன்பற்றில் முற்பகல் 10 மணிக்கும் மாமுனை மாவீரர் தூபியடியில் இரவு 8 மணிக்கும்.

★ தென்மராட்சிப் பகுதிக்கான கூட்டம் — மிருசுவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் இரவு 7 மணிக்கு (த)

### சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 21

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கலை, இலக்கிய, சமூக, பண்பாடு ஆகியவை சம்பந்தமாக அந்தந்தத் துறை சார்ந்த அறிஞர்களின் சொற்பொழிவும், கலந்துரையாடலும் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் கழகத்தின் தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் நாளை காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கும் நிகழ்ச்சியில் மூதறிஞர் வா. சி. குலரத்தினம் "அறுபது ஆண்டுகளுக்கு முந்திய யாழ்ப்பாணம்" என்னும் தலைப்பில் உரையாற்றுவார். [உ-3]

### இன்று இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், செப். 21

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடத்தும் கிரிக்கெட்போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

மட்டுப்படுத்தப்பட்ட 40 ஓவர்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் யாழ். ஷப்றா அணியும், செல் ரைட்ஸ் விளையாட்டுக் கழக (சொக்ஸ்) அணியும் மோதுகின்றன. (உ)

### கிட்டுவின்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருந்தார். இது முட்டாள்தனமான பதில்'- என்றும் திரு. அத்துலத் முதலி கூறினார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய குற்றச்சாட்டை நிரூபிக்க தொடர்புடைய தஸ்தாவேஜுகள் உள்ளனவா என்ற கேள்விக்கு திரு. அத்துலத்முதலி பதில் அளிக்கையில், "போதுமான தஸ்தாவேஜு சாட்சியம் எம்மிடம் உண்டு. இது ஒரு பகிரங்க ரகசியம். பல தூதர்களும், ராஜதந்திரிகளும் ஆயுதம் வழங்கிய விஷயத்தை வெளியிட்டுள்ளனர். அரசு தமக்கு ஆயுதங்களை தந்தது என்று திரு. பிரபாகரன் கூட அண்மையில் ஏற்றுக் கொண்டுள்ளார்" என்றார்.

"நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்தவுடன் எடுக்க வேண்டிய பதில் நந்திரோபாயம் உங்களிடம் தயாராக உள்ளதா?—" என்று வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு "நாம் தயாராகவே இருக்கிறோம்" என்று செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட திரு. காமினி திஸநாயக்கா பதில் அளித்தார். [இ-எ]

### நட, கள போட்டிகள்

யாழ்ப்பாணம், செப். 21

தியாகி திலீபன், நட, கள போட்டிகள் எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் போட்டி 22, 23 ஆம் திகதிகளில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

வேக நடைப் போட்டி 27 ஆம் திகதி காலை 6 மணிக்கு நடைபெறும். (உ-எ)

### பிரபாவிட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தீர்வில் இந்தியாவுக்கு ஏதும் பங்குண்டா?

தொண்டமான்: இனப் பிரச்சினை உள்நாட்டு விஷயம். அதில் எவரும் தலையிடக்கூடாது என்பது இலங்கையின் அபிப்பிராயம். இந்திய முயற்சி இடம் பெற இப்போது சந்தர்ப்பமே இல்லை என்று நான் நினைக்கின்றேன். அத்தகைய சந்தர்ப்பம் இருக்குமானால் அமைதிப்படை வாபஸ் பெற்றிருக்காது.

கேள்வி: மக்களிடமிருந்து விடுதலைப்புலிகள் தனிமைப் படுத்தப்பட்டு விடுவார்களா? விடுதலைப் புலிகள் போராளிகளா? அல்லது தீவிரவாதிகளா?

தொண்டமான்: இலங்கையில் தமிழ்ப் பகுதிகளில் இப்போது மக்களுக்காக போரிடும் ஒரே சக்தி விடுதலைப்புலிகள்தான். இல்லாவிடில் மக்கள் அவர்களைத் துரத்தியடித்திருப்பார்கள். (இ-எ)

### நல்லூரில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திகதி தியாகி திலீபன் வீர மரணமடைந்த நேரமான 10.48 மணிக்கு உண்ணாவிரதிகள் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி, திலீபனின் உருவப் படத்திற்கு மலர் சாத்துவார்கள்.

தமிழர் தாயகத்துக்காக — தமிழீழ வெற்றிக்காக தனது உடலையே வருத்தி, வீர மரணமடைந்த திலீபனின் திருநாட்களை நினைவு கொள்ள அனைத்து தமிழீழ மக்களையும் அணி திரண்டு வருமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது. [ஒ-15]

### தியாகத் தேன்: 7

காலனுக்கு அஞ்சாமல்
கடிதம் எழுதியவனே! — நீ
வேலவன் கோயிலின் முன்
ஆலமரம் போல்......
விழுதுவிட்டு நின்றதனால்
சிலமுறு மக்கள்
சிந்தினரே கண்ணீரை......

— வாஞ்சிநாதன்

(தியாகி திலீபன் நினைவாக)

### ஶ்ரீலங்கா ஜனா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடத்திக் கொண்டிருந்த காலத்தில் — ஜனாதிபதி பிரேமதாஸா விடுதலைப் புலிகளுக்கு பெருமளவு ஆயுதங்களை வழங்கினார் என்று ஜனாதிபதிக்கு எதிரான அதிருப்தியாளர் குழுவினர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இந்திய அமைதிப் படையால் வடக்கு - கிழக்கில் அமைக்கப்பட்ட தமிழ்தேசிய இராணுவத்தை அழிக்கவே விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கப்பட்டதாக இந்தியாவுக்கான ஶ்ரீலங்காத் தூதுவர் நெவில் கனகரட்ணா புதுடில்லியில் வைத்து கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது;

எனினும் இந்தியப்படைக்கு எதிராகப் போராடவும் இந்தியப் படையை ஶ்ரீலங்காவிலிருந்து வெளியேற்றவுமே ஜனாதிபதி பிரேமதாஸா விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கினார் என்று சுயாதீன செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுக்கு ஶ்ரீலங்கா அரசு ஆயுதம் வழங்கியமையும் —

அதனைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்வது போன்ற போக்கில் ஶ்ரீலங்கா தூதரும் மற்றும் அரச வட்டாரங்களும் தகவல் வெளியிடுவதும் இந்தியாவுக்கு பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய — ஶ்ரீலங்கா ஒப்பந்தத்தின் கீழ், ஶ்ரீலங்கா ஜனாதிபதியால் அழைக்கப்பட்ட இந்திய அமைதிப் படைக்கு எதிராக சண்டையிடுவதற்கு ஶ்ரீலங்கா ஜனாதிபதியே ஆயுதங்களை இரகசியமாக வழங்கியதும் —

இரு நாட்டு ஒப்பந்தத்தின் கீழ், ஶ்ரீலங்கா அரசின் ஒத்துழைப்போடு இந்திய அமைதிப்படையால் அமைக்கப்பட்ட தமிழ் தேசிய இராணுவத்தை அழிக்க ஶ்ரீலங்காப் படையே நேரில் உதவி வழங்கியிருப்பதும் இந்தியாவை சினங்கொள்ள வைத்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது. [உ-எ]

### அவகாசம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

15 மாத காலப் போரில் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 2 ஆயிரத்தைத் தாண்டிவிட்டது.

இவற்றை எல்லாம் பார்க்கும் போது, எமது படையினருக்கு எதிராக பாவிப்பதற்கு எமது எதிரிக்கு ஆயுதங்களைக் கொடுத்த ஒருவரின் தலைமையிலான அரசில் நாம் இருக்க முடியுமா?

டயர்கள் எமது பயணத்தை இலகுவாக்கத்தான் உள்ளன. ஆனால் அவை ஒருவரின் வாழ்க்கைப் பயணத்தை முடித்து வைக்க பயன்படக் கூடாது.

இப்படி திரு. அத்துலத் முதலி கூறினார். [இ-எ]

### ஜனாதிபதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணை ஒன்றை நாலாவதியாகச் செய்ய முடியாது என்றும் திரு. அத்துலத் முதலி கூறினார்.

நாடாளுமன்றத்தை இடைநிறுத்தி வைப்பதன் மூலம் அரசியல் குற்றச் சாட்டுப் பிரேரணை ஒன்றை காலாவதியாகச் செய்யமுடியுமென்றால்—

அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை ஒன்றின் மூலம் ஜனாதிபதி ஒருவரை பதவி நீக்கம் செய்வது முடியாத காரியமாகிவிடும். அந்தநிலை ஏற்படுமானால் அரசியல் சாசனத்திற்கு மதிப்பில்லாது போய்விடும்—என்று திரு. காமினி திஸநாயக்கா கூறினார். [இ-எ]

## 9 வேங்கைகள் களப்பலி

யாழ்ப்பாணம், செப். 21

மணலாறு மாவட்டத்தில் நடந்து வரும் எல்லைப் புற போரில் நேற்று முன்தினம் ஒன்பது வீரவேங்கைகள் களப் பலியானார்கள்.

பிருந்தன் [சுந்தரலிங்கம் இந்திரலிங்கம் - அல்வாய்], மல்லிகா [செல்வலட்சுமி இராசலிங்கம் - கிளிநொச்சி], கார்த்திகா [வசந்தா நடராசா - வேலணை], சுமன் [இராசையா சந்திரகுமார்-ஓமந்தை]

தம்பி [பாலசுப்பிரமணியம் தேவராசா - கரைநகர்], தம்பன் [மகாதேவா குமணன் - சாவகச்சேரி], சிலன் [தாமோதரம்பிள்ளை இளம்பிறைநாதன் - சாவகச்சேரி], ஜீவா [சுப்பிரமணியம் கமலநாதன் - வேலணை], சிவகாமி [யோகராணி லக்ஷ்மனன் - வவுனியா] ஆகியோரே அந்த ஒன்பது போராளிகளும் ஆவர். [ஒ]

## தியாகி திலீபன் ஞாபகார்த்தமாக

# வீட்டுக்கு ஒரு வீரரை தந்து உதவுங்கள்!

### ஆஞ்சநேயர் கோரிக்கை

"எதிர்வரும் 24, 25, 26 ஆம் திகதிகளில் நல்லூரில் திலீபன் நீதிப் போர் நடத்தி உயிர் நீத்த இடத்தில் உண்ணா நோன்பும் நினைவுக் கூட்டமும் கலை நிகழ்வும் நடைபெறவுள்ளன.

தியாகி திலீபனின் இந்த நினைவு நாளிலே தேசப்பற்று மிக்க பெற்றோர்கள், திலீபன் ஞாபகார்த்தமாக வீட்டுக்கொரு வீரனைத் தாயகத்திற்குத் தர வேண்டும். இளைஞர்களும் யுவதிகளும் போராட்டத்தில் குதிக்க வேண்டும்.

—இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்களுறவு, கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

"இன்று களத்தில் எதிரியை எதிர்த்துப் போராடி அவர்களின் தலைகளை எமது போராளிகள் பந்தாடிக் கொண்டிருக்கிறார்கள்.

எதிரிக்கு பலத்த இழப்புகளை ஏற்படுத்தி பலர் வீரமரணமடைகின்றனர். பலர் வீரவடுக்களைச் சுமக்கின்றனர்.

எமது கரங்களில் இருந்து விழும் ஆயுதங்களை எமது மக்கள் ஏந்தி எமது தாயக விடுதலைப் போராட்டத்தை வென்றெடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடே அவர்கள் வீரமரணமடைகிறார்கள்; வீரவடுக்களைச் சுமக்கிறார்கள்.

அந்த வெற்றியை விரைவில் பெற்றுக் கொள்வதன் மூலம் எமது மண்ணில் ஏற்படக் கூடிய பேரழிவுகளைக் குறைத்துக் கொள்ளலாம். இதை உணர்ந்து வெற்றிக்கு வழிகாட்ட வீட்டுக்கொரு வீரரைத் தாருங்கள்."

—இவ்வாறு அவர் மேலும் கோரியுள்ளார். [உ]

## அரசியல் குற்றப் பிரேரணை விஷயத்தில்

# ஜனாதிபதியே பிரதிவாதி அவர் தீர்ப்புக் கூறமுடியாது

### இப்படி லலித் கூறுகிறார்

கொழும்பு, செப். 21

அரசியல் குற்றப் பிரேரணை விஷயத்தில் ஜனாதிபதி தான் எதிரி அல்லது பிரதிவாதி ஆவார். ஆகவே வழக்கு முடிந்து விட்டது என்று ஜனாதிபதி தீர்ப்புக் கூறமுடியாது. ஜனாதிபதி நீதிபதியாக முடியாது. இவ் வழக்கில் நீதிபதியாக இருப்பவர் சபாநாயகரே. அவர் தான் தீர்ப்பு வழங்க வேண்டும்.

பத்தேகமவில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் அத்துலத் முதலி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பிரேரணையை சபாநாயகர் ஏற்றுக் கொண்டவுடன் அதனை நாடாளுமன்றத்தில் விவாதித்து பின்னர் உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் தான் சட்டமா அதிபர்.

மனித உரிமை மீறலுக்கு எதிராக எவரும் சட்ட நிவாரணம் பெற வசதியளிக்கும் விதி அரசமைப்பில் உள்ளது.

ஜனாதிபதி எதனைச் செய்தாலும் அவர் மீது வழக்குத் தொடர முடியாது என்று அரசமைப்பு சட்ட விதி மூலம் தடைவிதிக்கப்பட்டுள்ளது தான் தவறானதாகும். அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் மட்டும் குற்றச் சுமத்தும் பிரேரணையை நாம் கொண்டுவர முடியும்.

எனது கரங்கள் கறைபடியாதவை. எனது நலனுக்காக எந்தப் பெரிய ராஜாவுடனும் நான் கைகுலுக்கவில்லை. கசினோ மன்னர்களுடனும் நான் கைகுலுக்கவில்லை.

எனது சொந்த இரத்தத்தைத் தவிர வேறு நபரின் இரத்தம் எனது கைகளில்படவில்லை.

இப்படி லலித் அத்துலத் முதலி கூறினார். (இ-எ)

### சகோதரர்கள் இருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 21

ஷெல் தாக்குதல் அதிர்ச்சியால் வெடித்திருந்த சுவர் மீது ஏறி விளையாடிய இரு சகோதரர்கள் அது இடிந்து விழுந்ததில் காயமடைந்தனர்.

மிருசுவில் தெற்பவிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மகேந்திரராசா தவலலிதா [வயது 10], மகேந்திரராசா சயந்தன் [வயது 8] ஆகிய இருவரும் காயமடைந்தனர். [ஒ-15]

### இந்தியாவில் அச்சிடப்பட்டாலும் சாஹித்திய பரிசு

கொழும்பு, செப். 21

இந்தியாவில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்களையும் இலங்கைத் தமிழ் சாஹித்திய பரிசளிப்பு போட்டிக்கு அனுப்பி வைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி முடிவுத் திகதி இம் மாதம் 30 ஆம் திகதி என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## அறிவித்தல்

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலுக்காக அங்கத்தவர் அட்டவணை 31-12-1991 உடன் மூடப்படவிருக்கின்றது. அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் தங்கள் தங்கள் கிளைகள் மூலம் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

—செயலாளர்.

17-9-1991. (சி/0567)

## யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி

வடமராட்சி
மந்திகை, புலோலி

**கல்வியாண்டு 1991 / 1992**

★ கலை முதற்தேர்வு G. A. Q.
★ வணிக முதற்தேர்வு 1st in Com.

ஆகிய தேர்வுக்கான விண்ணப்பப் படிவங்கள் இக் கல்லூரி மூலம் பெறப்பட்டு யாழ் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்டு விசேட விரிவுரையாளர்கள் மூலம் வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு:

ஏ. என். எஸ். திருச்செல்வம்,
மந்திகை, புலோலி.

என்ற முகவரியுடன் தொடர்பு கொள்க. மாணவர்களுக்கான நூலக வசதிகளும், மேலதிக கருத்தரங்குகளும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

யாழ். பல்கலைக்கழக
விண்ணப்ப முடிவு திகதி: 30-09-1991

பயில விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

A. V. தங்கராசா,
முன்னாள் பிரதம கல்வி அதிகாரி.

பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக-
வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி,
வடமராட்சி — மந்திகை, புலோலி.

[18210]

## பிறந்ததின வாழ்த்து



★ செல்வன் சஜீத் அனோஜன் ★
21 — 09 — 1991

பிரான்சில் வசிக்கும் உதயகுமார் சாந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சஜீத் அனோஜன் இன்று தனது முதலாவது பிறந்ததினத்தைப் பிரான்சில் தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார்.

இவரைப் பிரான்சிலுள்ள அப்பா, அம்மா, மாமாமார் றெஜீஸ், ஜீவா, வைபந்திச்சித்தி மற்றும் பாஷையூரில் வசிக்கும் அம்மப்பா பஸ்ரியாம்பிள்ளை அம்மம்மா கிளாறம்மா, சுபந்திச் சித்தி, சாந்தி அத்தை, தட்ஷாயினி மச்சாள் மற்றும் உறவினர்கள் யாவரும் சீரும் சிறப்புடனும், பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென இறை ஆசி வேண்டி வாழ்த்துகிறார்கள்.

இல: 42, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

பஸ்ரியாம்பிள்ளை
குடும்பத்தினர்.

(18198)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21 - 09 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தூய தமிழ் நடைமுறைக்கு பல்வேறு திட்டங்கள்

## நேற்றைய கூட்டத்தில் விளக்கம்

யாழ்ப்பாணம், செப். 21

தூய தமிழை வழக்கில் கொண்டுவருவது தொடர்பாக பல்வேறு திட்டங்களை விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகம் நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

இது தொடர்பாக நேற்று கலை, பண்பாட்டுக் கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் விளக்கமளித்தார்.

நடைமுறைக்கு வரவிருக்கும் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ இயக்க உறுப்பினர்களின் பெயர்கள் தூய தமிழில் வைக்கப்படும்.

★ வணிக நிலையங்களுக்கான பெயர்களை தனித் தமிழுக்கு மாற்றுதல்.

★ இயக்க நடவடிக்கைகள் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் தூய தமிழில் மேற்கொள்ளுதல்.

★ மக்களிடையே இந்த புதிய முறையை நடைமுறைப் படுத்தல்.

★ தூய தமிழ் சொற்களை ஆக்க விசேட குழு அமைத்தல்.

★ அனைத்து நிலைகளிலும் வெளிவரும் நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் படைப்புகளை தூய தமிழ் குழுவின் மொழி அங்கீகாரம் பெறுமாறு வலியுறுத்தல்.

★ பிறக்கும் குழந்தைகளுக்கு தூய தமிழ் பெயர்களை வைத்தல்

★ தூய தமிழ் பெயர் பட்டியல் கொண்ட அகராதி ஒன்றைத் தயாரித்தல்.

★ அரச திணைக்களங்களில் தூய தமிழ் பாவனையை ஊக்குவித்தல்.

(உ-3)

# அமெரிக்க மிஷன் ஸ்தாபிக்கப்பட்ட 175 ஆம் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், செப். 21

அமெரிக்க இலங்கை மிஷனின் 175 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் நேற்று வெள்ளிக்கிழமை பாடசாலைகளில் கொடியேற்றுதலுடன் ஆரம்பமாகின.

இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு உடுவில் தென் இந்திய திருச்சபையில் சிறப்பு வழிபாடும் பின்னர் மகளிர் கல்லூரியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

மாலை 4.00 மணிக்கு கிறிஸ்தவ இறையியற் கல்லூரியின் புதிய விடுதிக் கட்டட திறப்பு வைபவமும், பொதுக் கூட்டமும் மருதனார்மடத்தில் உள்ள கிறிஸ்தவ இறையியற் கல்லூரியில் நடைபெறும்.

திங்கட்கிழமை காலை முதல் மாலை வரை முழு நாள் நிகழ்ச்சிகள் வட்டுக்கோட்டை பேராலயத்தில் இடம்பெறும். [இ]

# சுவிஸில் ஈழ அகதிகளின் முகாம்கள் மீது தாக்குதல்

பேர்ன், செப். 21

சுவிட்சர்லாந்து நாட்டில் ஈழத் தமிழ் அகதிகள் தங்கியிருக்கும் முகாம்களில் சிலவற்றின் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்திவருகின்றனர் என்றும்—

அது குறித்து பொலீஸார் விசாரணை நடத்தி வருவதாகவும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்திருக்கிறது.

[உ-எ]

PHYSICS
திரு. அருள்தாஸ்
B. Sc.

சனி — ஞாயிறு

9-00 Heat
10-00 Paper Class (Sound)
11-00 Electricity

*BOND*
கல்வி நிறுவனம்,
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[4304]

5ஆம் ஆண்டு
புலமைப்பரிசில்

6ஆம் ஆண்டு
அனுமதிப்பரீட்சைகளுக்கான முன் மாதிரிப் பயிற்சிப் பரீட்சை
(தமிழ், கணிதம், ஆங்கிலம்)

ஒவ்வொரு -
ஞாயிறும்
பிற்பகல்
நடைபெறும்.

BOND
புத்தக நிறுவனம்,
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[4305]

## நாடாளுமன்ற கூட்டத் தொடர் செவ்வாயன்று

கொழும்பு, செப். 21

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் இம் மாதம் 24 ஆம் திகதி காலை 10.40 மணிக்கு அங்குராப்பணம் செய்து வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றச் செயலகம் வெளியிட்ட ஒழுங்குப் பத்திரத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒழுங்குப் பத்திரம் கடந்த வியாழன் வெளியிடப்பட்டது. [இ-எ]

## சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், செப். 21

மர்மமான ஒரு பொருளை எடுத்து குத்திப்பார்த்த சிறுவன் அது வெடித்ததில் காயமடைந்தான்.

வவுனியா ஆண்டியா புளியங்குளத்தில் கடந்த புதன் கிழமை நடந்த இந்தச் சம்பவத்தில் செட்டிகுளத்தைச் சேர்ந்த செல்லையா செல்லத்துரை (வயது 13) என்ற சிறுவனே காயமடைந்தவர் ஆவார். [ஒ-15]

## மேலும் 10 பேர் கைது

சென்னை, செப். 21

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சுவரொட்டிகளை பஸ்கள் மற்றும் பொதுச் சுவர்களில் ஒட்டியது மற்றும் ரகசியக் கூட்டங்கள் நடத்தியது ஆகியன தொடர்பாக பத்துப் பேரை பொலீஸார் கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் கைது செய்துள்ளனர்.

(இ-எ)

# பிரேமா பக்கம் எம்.பிக்கள் எத்தனை பேர்? 24 இல் தெரியும் என்கிறார் சிறிமா

கொழும்பு, செப். 21

தமது பக்கம் 116 பேரும் தமக்கு எதிராக 8 பேரும் தான் உள்ளனர் என்று பிரேமதாஸா கூறிவருகிறார். ஆனால் இம்மாதம் 24 இல் பிரேமதாஸாவுக்கு எதிராக 8 பேர் மட்டும் தான் இருக்கிறார்களா என்பதை உலகம் அறியப்போகிறது.

மாத்தறையில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்காக ஐ. தே. க. அரசு அன்று எனது குடியுரிமையைப் பறித்தது. ஆனால் இன்று பிரேமதாஸா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவரிடம் என்ன உரிமைகள் மிஞ்சப்போகின்றன? இப்படி திருமதி பண்டாரநாயக்கா கேட்டார்.

## உயர்நீதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மன்றத்திற்கு ஒப்படைத்தால்—

நீதிமன்றம் விசேட காரணங்களுக்காக முடிவு செய்தால் ஒழிய, அது தொடர்பான விசாரணை அந்தரங்கமாக நடைபெற வேண்டும் என்றும் அரசமைப்பின் 129[4] ஆம் பிரிவு தெரிவிக்கிறது. [உ-எ]

## அறிவித்தல்

சீ-நோர் தொழிலாளர்களின் எதிர்கால நிலை சம்பந்தமான முடிவு எடுப்பதற்காக எதிர்வரும் 25-9-91 அன்று காலை 9.30 மணியளவில் எமது சபையின் பொதுக் கூட்டம் தொழிற்சாலையில் நடைபெற உள்ளது. எனவே சகல தொழிலாளர்களையும் சமுகம் கொடுக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
தலைவர், செயலாளர்
சீ-நோர் அபிவிருத்திச் சபை

(4307)

யாழ். பல்கலைக்கழகத்திற்கான
## பட்டப்படிப்புகள்
(முற்றிலும் பல்கலைக்கழக வசதிகள் கொண்ட ஓரே நிறுவனம்)

**G. A. Q.** (8-00 — 5 00)
**1st In COM.** (8-00 — 5-00)

விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன!
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன!

பேராதனை விரிவுரைகள் 05 - 10 - 1991
8 - 00 மணி

பகல்நேர விரிவுரைகள் (G.A.Q. — 1st IN COM.) ஆரம்பமாகவுள்ளன.

பெயர்கள் முன் கூட்டியே பதிவு செய்யப்பட வேண்டும்.

மு. குறிப்பு (விக்னா கல்வி நிறுவன விரிவுரையாளராலும், பட்டப்படிப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களாலும் ஒருங்கிணைந்து போதிக்கப்படும்.)

*The College of Higher Studies,*
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
[ஆனைப்பந்தி தனியார் வைத்தியசாலைக்கு அருகாமை] [சி-0549]

யாழ். பல்கலைக் கழக வெளிவாரி
## ★ பட்டப்படிப்புகள் ★
# G. A. Q
(கலை முதற் தேர்வு)

## மாலை நேர விரிவுரைகள்
(3 மணி முதல் 6 மணி வரை)

**ஆரம்பம்: 25-09-91 புதன்**

புதன்கிழமை நேர சூசி

3.00 — 4.00 பொருளியல்
திரு. S. வரதராஜன் B. A. (Hons)

4.00 — 5.00 இந்துநாகரீகம்
திருமதி S. அருள்நங்கை B A. (Hons)

நிர்வாகி
தொடர் கல்வி நிலையம்.
உடுவில் மகளிர் கல்லூரி
சுன்னாகம்.

[C/0570]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org